செ.வெ.எண்:32 நாள்:22.06.2020

**கரூர் மாவட்டம்**

**உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரேனா தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலில் குறு, சிறு மற்றும் நடுத்த தொழில் நிறுவனங்கள் பொருளாதார ரீதியாக மீண்டெழும் வகையில் பிணையில்லமால் கூடுதலாக 20% மூலதன கடன் மற்றும் கடன் பங்கு தொகை வழங்கும் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது - இத்திட்டம் குறித்து தொழில்துறையினருடானா விளக்கக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இஆப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

**அதன் விபரம் வருமாறு:**

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரேனா தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பொருளாதார ரீதியாக மீண்டெழும் வகையில் பிணையில்லமால் கூடுதலாக 20% மூலதன கடன் மற்றும் கடன் பங்கு தொகை வழங்கும் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது - இத்திட்டம் குறித்து தொழில்துறையினருடானான விளக்கக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இஆப.,அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (22.06.2020) நடைபெற்றது

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு அறிவித்த ஊரடங்கினால் தொழிலாளர்கள் புலம் பெயர்ந்ததாலும், ஏற்றுமதி சந்தை மூடப்பட்டதாலும், பொருளாதார மந்தத்தினாலும் நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நலனுக்காக, பொருளாதார பின்னடைவில் இருந்து தொழில் நிறுவனங்களை மீட்டெடுக்கும் வகையில், பிணையில்லாமல் 20% கூடுதல் மூலதன கடன் தொகையையும், நலிவடைந்த நிறுவனங்களுக்கான கடன் பங்கு தொகையையும் உடனடியாக வழங்கும் வகையில் மத்திய அரசால் அவசர கால கடன் உத்திரவாத திட்டம் (Emergency Credit Line Guarantee Scheme-ECLGS) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கூடுதல் சிறப்பாக, தொழில் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு மிக்க இயந்திரங்கள் மூலம் உற்பத்தியையும் செயல் திறனையும் அதிகரிக்கும் வகையில், நான்காம் தலைமுறை தொழிற் புரட்சிக்கு தொழில்நிறுவனங்களை தயார் செய்யும் வகையிலான திட்டங்களும் அடங்கியுள்ளது.

முற்றிலும் இயந்திரமயமாக்குதலை அடிப்படையாக கொண்ட நான்காம் தலைமுறை தொழில் புரட்சியினால் பல வழிகளில் தொழில் நிறுவனங்களின் செலவு குறைந்து செயல் திறன் அதிகரித்தல்(Cash Reduction and Efficiency), மதிப்பு கூட்டுதல் (Value Addition) மற்றும் பணியாளர்களின் நலன் மற்றும் (Health and Safety of Factory workers) ஆகிய நன்மைகள் ஏற்படும். புதிய தொழில் நுட்ப வளர்ச்சியை அடையாளம் காணவும், தொழில் கட்டமைப்பு வசதிகளை கண்டறிந்து அரசு இணைந்து செயல்படுத்தவும், தொழிற் சங்கங்கள் முன்வரவேண்டும். எனவே, இந்த இக்கட்டான சூழலிலும் மத்திய அரசின் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்தினை அனைத்து நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் புதிதாக தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு தனியார் வேலை வாய்ப்புக்கான இணைய தளத்தின் மூலம் (www.tnprivatejob.tn.gov.in) உங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான தகுதிமிக்க நபர்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். இந்த சிறப்பு இணைதளமானது வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான நபர்களை தேர்வு செய்து வேலை வழங்குவதற்கும் மிகப்பெரிய உதவியாக இருக்கும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் திரு.ரமேஷ், உதவி மேலாளர் திரு.கிரீசன், முன்னோடி வங்கி அலுவலர் திரு.ராஜேஷ், தமிழ்நாடு தொமில் முதலிட்டு கழக மேலாளர் திரு.அன்பழகன், SIDBI உதவி பொது மேலாளர் திரு.கான் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குறு, சிறு தொழில் நிறுவன சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**